[2nd March 1961

SRI N. K. PALANISAMI: ஏற்கனவே இது சர்வே செய்யப் பட்டதா? அப்படியானால் அதனுடைய முடிவு என்ன?

THE HON. SRI R. VENKATARAMAN: ஜியாலாஜிகல் சர்வே செய்யப்படவில்லை. பரிட்சார்த்தமாக மணலை எடுத்துப் பரிசீலனை செய்திருக்கிறார்கள். அப்படிப் பரிசீலனை செய்ததில் மிகக் குறைவான தங்கம் தூளாகக் கிடைக்கிறது. ஜியோபிஸிகல் சர்வே செய்யவேண்டுமென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

SRI A. VEDARATHNAM: எத்தனை சதவிகிதம் தங்கம் இருப்பதாக இதுவரை செய்த ஆராய்ச்சிமூலம் தெரியவருகிறது?

THE HON. SRI R. VENKATARAMAN: அந்த ஊர் கிராமத்தார்கள் சொன்னது என்னவென்றால், ஒருநாள் பூராவும் அரித்தால், அதிர்ஷ்டம் இருந்தால் 4 அணா தங்கம் கிடைக்குமென்று. இல்லாவிட்டால் அதுவும் இல்லை.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR: எந்த இடத்திலே பரிசீலனை செய்யப்பட்டது? எந்த இடத்திலே தங்கம் இருக்கிறது?

THE HON. SRI R. VENKATARAMAN: கனம் அங்கத்தினர் இதன் மூலமாக லாபம் சம்பாதிக்க விரும்புகிறாரோ, என்னமோ? (சிரிப்பு) அதை எல்லாம் இங்கே தெரிவிக்கமுடியாது.

Gypsum

*505 Q.—SRI S. RAMALINGA PADAYACHI: கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி ஜில்லா, அரியலூர் பகுதியில் கிடைக்கும் ஜிப்சம் கல்லைக்கொண்டு தொழிற்சாலை ஏற்படுத்த அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

(இ) ஆமென்றால், அதன் விவரமென்ன?

(உ) இல்லையென்றால், காரணமென்ன?

THE HON. SRI R. VENKATARAMAN: ( ) No, Sir.

(இ) & (உ) Do not arise.

SRI S. RAMALINGA PADAYACHI: இந்த ஜிப்சத்தை பல மாவட்டங்களுக்கு அனுப்பி பல பொருள்கள் செய்து வருகிறார்கள். உடையார்பாளையம், பெரம்பலூர் தாலுக்காக்களில் என் இந்தத் தொழிலை ஏற்படுத்தக்கூடாது?

2nd March 1961]

THE HON. SRI R. VENKATARAMAN : தொழிலை நடத்தலாம். யாரும் வேண்டாமென்று சொல்லவில்லை. ஒருவரும் இந்தத் தொழிலை நடத்த முன்வரவில்லை. சர்க்கார் எடுத்து நடத்தக்கூடிய நிலைமையில் இல்லை. யார் நடத்த முன்வந்தாலும், சர்க்கார் வேண்டிய உதவி செய்யும்.

SRI S. RAMALINGA PADAYACHI : உடையார்பாளையம், பெரம்பலூர் தாலுக்காக்கள் மிகவும் பிற்பட்ட பகுதிகள் என்பது தெரியும். சுற்றுப்பிரயாணம் செய்யும்பொழுது அங்கே தொழில் அமைச்சர் அவர்கள் வருவது இல்லை. ஆகவே அந்தப் பகுதி மக்கள் முன்னேறுவதற்கு அரசாங்கமே இந்தத் தொழிலை ஏன் எடுத்து நடத்தக்கூடாது?

THE HON. SRI R. VENKATARAMAN : நான் மீண்டும் சொல்ல விரும்புகிறேன். சர்க்காரே தொழிலை நேரிடையாகச் செய்வதான கொள்கை இல்லை. தனியார் யாராவது நடத்த முன் வந்தால், பண உதவி, இதர உதவி எல்லாம் கொடுக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

SRI T. R. RAMAMIRTHA THONDAMAN : இந்தக் கற்கள் திருச்சி ஜில்லாவிலே பழுவூர் பிர்க்காவிலே ஏராளமாக 25 மைல் சுற்றளவுக்கு கிடைத்து சுண்ணாம்புக் காளவாய்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்தக் கற்களைச் சேர்த்து ஒரு தொழிலை அமைப்ப தற்கு நடவடிக்கை எடுத்தால் நல்ல முறையில் பயன் பெறும். லாபகரமான முன்னேற்றமும் காணமுடியும். ஆகவே இதை ஸ்பெஷலாகப் பரிசிலனை செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா?

THE HON. SRI R. VENKATARAMAN : இப்பொழுதுதான் நான் சொன்னேன். இதை உபயோகிப்பதற்கு யார் முன்வந்தா லும் சர்க்கார் லைசென்சு கொடுத்து, எல்லா வசதிகளையும் செய்து கொடுக்க முடியுமென்றும், சர்க்காரே நடத்த இயலாது என்பதையும் தெரிவித்துக்கொண்டேன். தொழில் செய்ய முன்வரக் கூடியவர்கள், அதாவது தனியார் யாராக இருந்தாலும், பொறுப்பு எடுத்துக்கொண்டு நடத்த முன்வரலாம்.

Transport Workers

* 506 Q.—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state with reference to the answer given in the Legislative Assembly Question No. 544 on 24th March 1960—

(a) whether the investigation has been completed; and

(b) if so, the result thereof and the action taken thereon?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) The enquiry into the affairs of the Madras State Transport Department Employees' Co-operative Thrift and Credit Society has not yet been completed.

(b) Does not arise.